**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.265/2025**

2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 09–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: மணிமாறன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 13.03.2025 தேதியிட்ட பிரதிவாதி, வாதி பெயரில் வழங்கி அவரது வங்கியால் திருப்பப்பட்ட ரூ.23,00,000/–க்கான காசோலை எண்.065021 நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 14.03.2025 தேதியிட்ட வாதி வங்கியால் கசோலை எண்.065021 திருப்பப்பட்டதற்கு அளிக்கப்பட்ட குறிப்பாணையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. கடந்த 01.04.2025 தேதியிட்ட வாதி அனுப்பிய சட்டமுறையான அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.04.2025 தேதியிட்ட பிரதிவாதி வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.09 18:08:06 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.